மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) புதிய ஆரம்ப நிலவள வங்கிகளில் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கையில் பழைய வங்கிகளிலுள்ள உபரி ஊழியர்களுக்கு முன் உரிமை அளிக்க வேண்டுமென்று அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.

Delivery van owned by Super Market at Vellore

* 670 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the "Karpagam" Co-operative Super Market run by the North Arot District Co-operative Supply and Market- Society Limited, Vellore owns a van guard delivery van; and

(b) whether the vehicle is used by the Deputy Registrar-General Manager for his personal use?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். சரக்குகள் விநியோகிக்க வண்டி ஒன்று இந்தச் சிறப்பங்காடிக்குச் சொந்தமாக உள்ளது.

(இ) இல்லை. அவ்வண்டி மானேஜரால் அலுவலகக் காரியங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

திரு. கே. விநயகம் : சிறப்பங்காடிக்குச் சொந்தமான வண்டியை மானேஜர் அவர்கள் அலுவல் காரணமாகப் பயன்படுத்துவதில் எவ்வித அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் அது முடிந்த பிறகு இரவிலும், மாலை நேரத்திலும் அவர்கள் தன் சொந்தக் காரியங்களுக்காக அதைப் பயன்படுத்துகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அங்கேயும் புகார் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள், இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிற்பாடு அதையே கேட்கலாமா ?

THIRU K. VINAYAKAM : Is it God's truth? Should I not pry into the secret and try to pull out the answer? He says 'No'. Am I to take it as God's truth? That is not the intention of the question hour.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குக் கொடுக்கிற அறிக்கைகள், கருத்துக்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் உண்மை, அதுதான் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பது ஒரு மரபு. அது தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள், இன்ன நேரத்தில் இன்ன இடத்தில் எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்ல உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. உங்கள் கேள்வியில், அங்கே புகார் செய்கிறார்கள், அப்படிப்

பேசப்படுவது உண்மையா என்று கேட்கிறீர்கள். இன்ன நேரத்தில் இன்ன இடத்தில் இன்ன காரியத்திற்காக எடுத்துக் கொண்டு போனார்கள் என்று விநாயகம் அவர்கள் சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM : I can be more pungent. I will now level a charge against the person concerned. He is taking his children, wife and other members of his family to the cinemas every day in the evening. What is the answer? I wanted to put it in polished language.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடமிருந்து விடையை, உண்மையை வாங்குங்கள். அதற்குக் குறுக்கே நான் நிற்கவில்லை. ஆனால் உங்கள் கேள்வியில் நீங்கள் 'துணைப்பதிவாளர் —பொது மேலாளரால் அந்த வண்டி அவரது தனிப்பட்ட காரியங்களுக்கெனப் பயன்படுத்தப்படுகின்றதா?' என்று கேட்டிருக்கிறீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். அப்படி 'இல்லை' என்று சொல்லிவிட்ட பிறகு அப்படிப் பரவலாகப் பேசப்படுகிறது. புகார் இருக்கிறது என்று சொல்லக் கூடாது. இன்ன இடத்தில் இன்னார் இன்னாரை ஏற்றிச் சென்றார்கள், இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று கேளுங்கள். 'இல்லை' என்று சொல்லிவிட்ட பிறகு புகார் இருக்கிறது என்று சொல்வது முறையல்ல. இருக்கிற உண்மையை எடுத்துக் காட்டி இது தெரியுமா என்று கேளுங்கள். அதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM : I am not trying to scratch you on the wrong side. I always put questions in order having been trained properly. Please don't imagine for a moment that I am digressing from the rules. I wanted to be polished. I could have said that I have particulars in my possession and I shall give them to him. Then you will say "Give it to me in writing. I will enquire" and all that. Let him answer whether this van is not being used for his private purposes like going to the pictures and carrying his children to, and bringing them back from, the school.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Complaints were received and enquiries were made. All that was found was that the Manager, who is no longer the Manager, did not keep the trip sheets in a proper manner. There were omissions regarding details in the trip sheet. Action has been taken with regard to these omissions.

THIRU K. VINAYAKAM : I thank you very much.

திரு. ரா. கனகசபை : அலுவலகத்திற்குப் போகும்போது அல்லது வரும்போது சொந்த வேலைகளைக் கவனித்தால் அது குற்றம் என்று மந்திரி அவர்கள் கருதுகிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூடுமானவரையில் சொந்த வேலைகளைத் தனியாகவும், அலுவல் வேலைகளைத் தனியாகவும், வைத்துக் கொள்வது நல்லது. இது வான், இது கார் அல்ல.